# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 21 of 2020
## Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** புவியரசு | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated. 04.06.2026**

**முதல் விசாரணை**

நான் வெள்ளனூரில் வசித்து வந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன மகேந்திரன் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 28.06.2019 ம் தேதி நானும், வல்லவன் என்பவரும் கூலி வேலைக்கு சென்றுவிட்டு இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் நடந்து வந்து கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. எதிரி பதிவெண் இல்லாத புதிய XL 100 வண்டியை ஓட்டிக் கொண்டு அவருக்கு பின்னால் மகேந்திரன் என்பவரை உட்கார வைத்துக் கொண்டு மாலை 03.30 மணியளவில் திருச்சி–சிதம்பரம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து

கிழக்கு நோக்கி அதிவேகமாக இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் அவருக்கு முன்னால் சென்ற TN 88 D 5493 டிரெய்லர் லாரியை முந்துவதற்காக அஜாக்கிரதையாக வலதுபுறமாக ஏறி வேகத்தடை அருகில் சென்றபோது, எதிரே பஸ் வருவதை பார்த்து எதிரியானவர் தனது இருசக்கர வாகனத்தை பிரேக் போட்டதால் பின்னால் உட்கார்ந்திருந்த மகேந்திரன் என்பவர் லாரியின் நடுவில் உள்ள சென்டர் ஆக்சில் விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இதை பார்த்த நானும், அருகில் இருந்தவர்களும் அருகில் சென்று மகேந்திரனை பார்த்தபோது, அவர் இரத்தக் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துகிடந்தார் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக அ.சா.1 எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நேரில் பார்த்த விவரங்களை மறைத்து எதிரியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.04 17:03:35 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 21 of 2020**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வல்லவன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated. 04.06.2026**

**முதல் விசாரணை**

நான் வெள்ளனூரில் வசித்து வந்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன மகேந்திரன் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 28.06.2019 ம் தேதி நானும், புவியரசு என்பவரும் கூலி வேலைக்கு சென்றுவிட்டு இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் நடந்து வந்து கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. எதிரி பதிவெண் இல்லாத புதிய XL 100 வண்டியை ஓட்டிக் கொண்டு அவருக்கு பின்னால் மகேந்திரன் என்பவரை உட்கார வைத்துக் கொண்டு மாலை 03.30 மணியளவில் திருச்சி–சிதம்பரம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து

கிழக்கு நோக்கி அதிவேகமாக இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் அவருக்கு முன்னால் சென்ற TN 88 D 5493 டிரெய்லர் லாரியை முந்துவதற்காக அஜாக்கிரதையாக வலதுபுறமாக ஏறி வேகத்தடை அருகில் சென்றபோது, எதிரே பஸ் வருவதை பார்த்து எதிரியானவர் தனது இருசக்கர வாகனத்தை பிரேக் போட்டதால் பின்னால் உட்கார்ந்திருந்த மகேந்திரன் என்பவர் லாரியின் நடுவில் உள்ள சென்டர் ஆக்சில் விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இதை பார்த்த நானும், அருகில் இருந்தவர்களும் அருகில் சென்று மகேந்திரனை பார்த்தபோது, அவர் இரத்தக் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துகிடந்தார் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக அ.சா.1 எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நேரில் பார்த்த விவரங்களை மறைத்து எதிரியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.04 17:03:46 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 21 of 2020**

**Prosecution Witness : PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாண்டியன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated. 04.06.2026**

**முதல் விசாரணை**

நான் வெள்ளனூரில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன மகேந்திரன் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை. காலை 11 மணியளவில் நான் சொந்த வேலையாக இலால்குடி காவல் நிலையம் சென்றபோது போலீசார் எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றுக் கொண்டனர். அந்த கையெழுத்தை நான் எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2/அ.சா.6** ஆகும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 28.06.2019 ம் தேதி ராஜமாணிக்கம் என்பவர் பதிவெண் இல்லாத புதிய XL 100 வண்டியை ஓட்டிக் கொண்டு அவருக்கு பின்னால் மகேந்திரன் என்பவரை உட்கார வைத்துக் கொண்டு மாலை 03.30 மணியளவில் திருச்சி–சிதம்பரம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாக இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் அவருக்கு முன்னால் சென்ற TN 88 D 5493 டிரெய்லர் லாரியை முந்துவதற்காக அஜாக்கிரதையாக வலதுபுறமாக ஏறி வேகத்தடை அருகில் சென்றபோது, எதிரே பஸ் வருவதை பார்த்து எதிரியானவர் தனது இருசக்கர வாகனத்தை பிரேக் போட்டதால் பின்னால் உட்கார்ந்திருந்த மகேந்திரன் என்பவர் லாரியின் நடுவில் உள்ள சென்டர் ஆக்சில் விழுந்து விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக நானும், சக்திவேல் என்பவரும் சம்பவ இடத்தை பார்ப்பதற்காக சென்றிருந்தபோது, போலீசார் மாலை 05.30 மணியளவில் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.04 17:03:55 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி